# முலடியன பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 04 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 நவம்பர் 22 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் முலடியன பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முலடியன பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1999 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்துமுன்கொண்டு வரப்படுகின்ற தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கில் ரூபா 557,364 தொகையான மீதி மீளாய்வாண்டின் போதும் இனங்காணப்படாமலும் உறுதிப்படுத்தப்படாமலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டில் பூர்த்தியடைந்த 02 வேலைகளின் பெறுமதியான ரூபா 521,650 தொகை மீளாய்வாண்டின் போதும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் காணிகளைக் கையேற்றல் மற்றும் நான்கு முன்பள்ளிப் பாடசாலைகளுக்காக விளையாட்டு உபகரணங்களுக்கு ஏற்பட்ட ரூபா 105,250

தொகையான செலவினத்தை மூலதனமாக்காமல் மீண்டெழும் செலவினமாகக் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2020 ஆம் ஆண்டின் யூன், யூலை, ஆகஸ்ட், செம்தெம்பர் மற்றும் ஒக்தோம்பர் மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணம் தயாரித்தல் கொடுப்பனவாக ரூபா 9,475 தொகை 2010 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 79,837,830 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதியினுள் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த ரூபா 1,547,647 தொகையானது கடன்கொடுத்தோரில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,199,986 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,948,506 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,790,518 ஆக இருந்தமையால் ரூபா 1,157,988 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் 09 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 182?164,193 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்கக் கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை |
| (ii) | விதி 193 | |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரிச் செயலாளரின் ஐஏஐ2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 02 கணனிகளின் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,731,910 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,547,267 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 ஜனவரி 20 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி

தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 ரூபா. | 2009 ரூபா. | % | % |
| வீத வரி மற்றும் ஏக்கர் வரி | 77,759 | 64,412 | 20.72 | - |
| வாடகை | 392,750 | 334,237 | 17.5 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 39,050 | 43,230 | - | 9.6 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 77,759 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 விளம்பர அறித்தல் - திறந்த சுற்றாடல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் திறந்த சுற்றாடலின் கீழ் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல்களுக்காக 2009 நவம்பர் 27 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவித்தலில் கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 11 விளம்பர அறிவித்தல்களிலிருந்து ரூபா 16,675 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம்

1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 15333/13 ஆம் இலக்க வர்த்தகமானியின்(இ) பிரிவின் அறிவுரையின் பிரகாரம் சுற்றடல் பாதுக்காப்பு அனுமதிப்பத்திரம் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 107 நிறுவனங்களில் இருந்து ரூபா 714,000

தொகையான அனுமத்திரக் கட்டணம் மற்றும்பரிசோதனை செய்தல் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்**

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதி மன்றங்களினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 393,958 இற்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.6 முத்திரைக் கட்டணம்**

2009 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் ரூபா 2,103,336 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.7 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(1)(2)(3) ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றுச்சீட்டிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரச் சட்டத்தின் 152(4) இன் பிரகாரம் 12 வகையான வியாபரங்களுக்குரிய 34 அனுமதிப்பத்திரம் பெறுனர்களிடமிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 13,200 தொகையினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 11,874 | 9,937 | 1,937 | 12,098 | 9,854 | 2,244 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 4,284 | 3,719 | 565 | 4,775 | 3,101 | 1,674 |
| | ----------- | ---------- | --------- | ----------- | ---------- | --------- |
| உப கூட்டுத் தொகை | 16,158 | 13,656 | 2,502 | 16,873 | 12,955 | 3,918 |
| மூலதன செலவுகள் | 109,250 | 154,741 | (45,491) | 101,936 | 59,363 | 42,573 |
| | ----------- | ----------- | ---------- | ----------- | ----------- | ---------- |
| மொத்தக் கூட்டுத் தொகை | 125,408 | 168,397 | (42,989) | 118,809 | 72,318 | 46,491 |
| | ======= | ======= | ====== | ======= | ======= | ====== |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | - |
| இரண்டாம் தரம் | 14 | 13 |
| ஆரம்ப தரம் | 10 | 10 |
| ஏனையவை(அமைய, | - | 18 |
| | ------- | -------- |
| மொத்தம் | 25 | 31 |
| | ==== | ==== |

(அ) மீளாய்வாண்டின் பதிவேடுகளின் பிரகாரம் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 9,937,436 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணைாளரிடமிருந்து ரூபா 9,045,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 892,436 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 18 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,614,793 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப வகையில் ஆட்சேர்ப்புக்களைச்

செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,523,012 ஆகும்.

**2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**வீதி வளக்கு பராமரித்தல்**

(i) வீதி வளக்கு பரமரித்தல் தொடர்பாக மின்சார உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்கின்ற போது தேவையாதன் பிரகாரம் பரமரிக்கும் மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படயில் அவைகளின் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## முலடியன பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 நவம்பர் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் முலடியன பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முலடியன பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1999 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கில் ரூபா 557,364 தொகையான மீதி மீளாய்வாண்டின் போதும் இனங்காணப்படாமலும் உறுதிப்படுத்தப்படாமலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டில் பூர்த்தியடைந்த 02 வேலைகளின் பெறுமதியான ரூபா 521,650 தொகை மீளாய்வாண்டின் போதும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் காணிகளைக் கையேற்றல் மற்றும் நான்கு முன்பள்ளிப் பாடசாலைகளுக்காக விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு ஏற்பட்ட ரூபா 105,250 தொகையான செலவினத்தை மூலதனமாக்காமல் மீண்டெழும் செலவினமாகக் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் யூன், யூலை, ஆகஸ்ட், செம்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணம் தயாரித்தல் கொடுப்பனவாக ரூபா 9,475 தொகை 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 79,837,830 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதியினுள் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த ரூபா 1,547,647 தொகையானது கடன்கொடுத்தோரில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,199,986 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,948,506 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,790,518 ஆக இருந்தமையால் ரூபா 1,157,988 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் 09 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 182,164,193 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்கக் கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை |
| (ii) | விதி 193 | பாதிக்கப்பட்ட மற்றும் குறைநிரப்புகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவின விடயங்களின் உள்ளறவாறான மீதியினை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரிச் செயலாளரின் ஐஏஜ2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 02 கணனிகளின் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,731,910 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,547,267 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 ஜனவரி 20 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010<br>ரூபா. | 2009<br>ரூபா. | % | % |
| வீத வரி மற்றும் ஏக்கர் வரி | 77,759 | 64,412 | 20.72 | - |
| வாடகை | 392,750 | 334,237 | 17.5 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 39,050 | 43,230 | - | 9.6 |

#### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 77,759 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 விளம்பர பதாதைகள் - பொருத்தமான சுற்றாடல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தமான சுற்றாடலின் கீழ் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பதாதைகளுக்காக 2009 நவம்பர் 27 ஆந் திகதிய 1630 ஆம் இலக்க வர்த்தமானிஅறிவித்தலில் கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 11 விளம்பர பதாதைகளிலிருந்து ரூபா 16,675 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம்

1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/13 ஆம் இலக்க வர்த்தமானியின்(இ) பகுதியின் அறிவுரையின் பிரகாரம் சுற்றடல் பாதுக்காப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 107 நிறுவனங்களில் இருந்து ரூபா 714,000 தொகையான அனுமத்திரக் கட்டணம் மற்றும் பரிசோதனை செய்தல் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதி மன்றங்களினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 393,958 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் ரூபா 2,103,336 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.7 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(1)(2)(3)(4) ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றுச்சீட்டிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரச் சட்டத்தின் 152(4) இன் பிரகாரம் 12 வகையான வியாபாரங்களுக்குரிய 34 அனுமதிப்பத்திரம் பெறுனர்களிடமிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 13,200 தொகையினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 11,874 | 9,937 | 1,937 | 12,098 | 9,854 | 2,244 |
| ஏனையவை | 4,284 | 3,719 | 565 | 4,775 | 3,101 | 1,674 |
| உப கூட்டுத் தொகை | 16,158 | 13,656 | 2,502 | 16,873 | 12,955 | 3,918 |
| மூலதன செலவுகள் | 109,250 | 154,741 | (45,491) | 101,936 | 59,363 | 42,573 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 125,408 | 168,397 | (42,989) | 118,809 | 72,318 | 46,491 |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | - |
| இரண்டாம் தரம் | 14 | 13 |
| ஆரம்ப தரம் | 10 | 10 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 18 |
| மொத்தம் | 25 | 31 |

(஡) மீளாய்வாண்டின் பதிவேடுகளின் பிரகாரம் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 9,937,436 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 9,045,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 892,436 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ே) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 18 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,614,793 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இச்சுற்றுநிருப அறிவுரைகளை மீறும் வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதிவேடுகளின் பிரகாரம் அறவிட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,523,012 ஆகும்.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### வீதி விளக்கு பராமரித்தல்

(i) வீதி வளக்கு பராமரித்தல் தொடர்பாக மின்சார உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்கின்ற போது தேவையின் பிரகாரம் பரமரிக்கும் மின்சார தொழில்நுட்பவியலாளரின் வேண்டுதல் மற்றும் அதற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் அவைகளின் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகளை ஒன்றையொன்று வெவ்வேறாக இனங்காண்பதற்காக இலக்கம் அல்லது குறியீடு முறைமையொன்று உபயோகிக்கப்பட்டு ஒவ்வொரு வீதி விளக்குகளுக்கான மின்குமிழ்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் என்பவற்றைப் பொருத்தும் போது பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 79,650 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிராமையினால் எவ்வித நிதியையும் மீளளிப்புச் செய்யமுடியாதிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகள் ஒன்றையொன்று வெவ்வேறாக இனங்காண்பதற்காக இலக்கம் அல்லது குறியீடு முறைமையொன்று உபயோகிக்கப்பட்டு ஒவ்வொரு வீதி விளக்ககளுக்கான மின்குமிழ்கள் மற்றும் ஏறைய உதிரிப்பாகங்கள் என்பவற்றைப் பெருத்தும் போது பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 79,650 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிராமையினால் எவ்வித நிதியையும் மீளளிப்புச் செய்யமுடியாதிருந

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்